**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 105 of 2023**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுரேஷ் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(A1, A2 Present)**

**Dated.18.06.2025**

**முதல் விசாரணை**

நான் சிறுகனூர் காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து பெரம்பலூர் MRF டயர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 14.01.2023 ம் தேதி காலை சென்னையிலிருந்து பொங்கலுக்காக வீட்டிற்கு வந்திருந்தேன். கடந்த 15.01.2023 ம் தேதி இரவு 10 மணியளவில் சிறுகனூர் சமுதாய கூடம் அருகில் என் நண்பர்களுடன் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, எதிரிகள் சம்பவ இடத்திற்கு வந்து என்னை பார்த்து தேவுடியா, புண்டாமவனே என்று அசிங்கமாக பேசி, இவ்வளவு நாள் நீ எப்ப வருவ என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம் என்று சொல்லி கையாலும், கற்களாலும் என்னை தலையில் அடித்தார்கள். எங்கள் ஊரில் சொல்லி பிரச்சனை எதுவும் வேண்டாம் என்று சொல்லி சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்கள். மீண்டும் 17.01.2023 ம் தேதி இரவு 11.30 மணியளவில் பொங்கல் விளையாட்டு போட்டி முடிந்த பிறகு எங்கள் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் முன்பு நண்பர்களுடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திற்கு வந்து என்னை பார்த்து தேவுடியாமவனே என்று அசிங்கமாக பேசி எங்களை ஊரில் வைத்து அவமானப்படுத்துறியா என்று சொல்லி, எதிரிகள் இருவரும் கத்தியால் என்னை வெட்ட வந்தபோது, நான் எனது இடது

கையால் தடுத்தபோது கத்தியானது எனது இடது கை கட்டை விரலிலும், இடது பக்க தலையிலும் காயம் ஏற்பட்டது. எதிரிகள் இருவரும் என்னைக்கு இருந்தாலும் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு எனது அப்பாவின் மூலம் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனை சென்று எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்றுக் கொண்டேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசாரிடம் மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–** இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 105 of 2023**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பார்த்திபன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(A1, A2 Present)**

**Dated.18.06.2025**

**முதல் விசாரணை**

நான் சிறுகனூர் காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து MRF டயர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2/அ.சா.2** ஆகும். கடந்த 19.01.2023 ம் தேதி காலை 7 மணியளவில் நானும் சாட்சி சரவணன் என்பவரும் சம்பவ இடத்தின் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, போலீசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர். அந்த பார்வை மகஜரில் நானும், சரவணன் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3/அ.சா.2** ஆகும். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–** இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 105 of 2023**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சரவணன்** | **Caste** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |

**(A1, A2 Present)**

**Dated.18.06.2025**

**முதல் விசாரணை**

நான் சிறுகனூர் காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து MRF டயர் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.4/அ.சா.2** ஆகும். சுமார் 2 வருடங்க்ளுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை. காலை 7 மணியளவில் நானும், அ.சா.2ம் சம்பவ இடத்தின் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, போலீசார் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர். அந்த பார்வை மகஜரில் நானும், அ.சா.2 சாட்சி கையொப்பம் இட்டோம். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)–** இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி